CHURCH OF SOUTH INDIA SYNOD SECRETARIAT

#5 Whites Road, Royapettah,Chennai - 600014

**LENTEN CALL FOR “CABON FAST”**

**லெந்து கால அழைப்பு**

**Most.Rt.Rev. தாமஸ் K உம்மன் அவர்களிடமிருந்து வந்த சுற்றறிக்கை**

**(Moderator C.S.I)**

தென் இந்திய திருச்சபையின் அனைத்து பேராயார்களுக்கும் அனுப்பபடுகிறது

கிருபையும் சமாதானமும் உண்டாவதாக

## 1. நாம் பாவம் செய்து விட்டோம்

1.1 நாம் சிருஷ்டி கர்த்தரால் படைக்க பட்டவர்களானபடியால், அவர் படைத்த அனைத்து படைப்புகளையும் மதிக்க வேண்டும். ஆதி 1:28 என்ற வசனத்தின்படி **ஆண்டு கொள்ள அழைக்க பட்டவர்கள்** என்பது படைப்பின் மீது நாம் ஆதிக்கம் செலுத்துவவதற்கோ அல்லது இயற்கையை அழிப்பதற்கோ இல்லை. எசேக்கியேல் 34:4 - ல் கர்த்தர் வலிமையாகவும், கடுமையாகவும் “ஆண்ட“ ராஜாவை நோக்கி “நீங்கள் பலவீனமானவைகளைப் பலப்படுத்தாமலும் , நசல்கொண்டவைகளைக் குணமாக்காமலும் , எலும்பு முறிந்தவைகளைக் காயங்கட்டாமலும் , துரத்துண்டவைகளைத் திருப்பிக்கொண்டு வராமலும், காணாமற்போனவைகளைத் தேடாமலும் போய் , பலாத்காரமும் கடூரமுமாய் அவைகளை ஆண்டீர்கள் ” என்று சொன்னார். எனவே, ஆண்டுகொள்ளுதல் என்பது அதிகாரம் செலுத்துவது இல்லை, மாறாக கர்தருடைய படைப்புகளின் மீது “அக்கறை” செலுத்துவதும்,அவைகள் மீது “பாதுகாவலராய்” இருப்பதுமே. மேற்கூறியவற்றை நாம் செய்யாது இருப்பின் சிருஷ்டிகர்த்தா முன் ஒழுங்கினமானவர்களாயும், படைப்புகளில் இருந்து வேறு பட்டவர்களாயும் இருப்போம்.எனவே, இது பாவமாகும்.

1.2 **கர்த்தருடைய** தெய்வீக பாதுகாப்பு சகலத்திற்க்கும் உண்டு. பெருவெள்ள அழிவிற்க்கு பின்பு, கர்த்தர் நோவாவோடும், அவரது சொந்ததங்களோடு மட்டுமல்ல,உலகில் உள்ள ஒவ்வொரு உயிரினத்தோடும், பறவைகளோடும், நாட்டு விலங்கினத்தோடும் மற்றும் பூமியில் உள்ள சகல விலங்குகளோடும் உடன்படிக்கை ஏற்படுத்தினார்.(ஆதி 9:9-10) சங்கீதம் 145:9 " **கர்த்தர்** எல்லார்மேலும் தயவுள்ளவர் ; அவர் இரக்கங்கள் அவருடைய எல்லாக் கிரியைகளின்மேலுமுள்ளது” என்பதை உறுதிபடுத்துகின்றது. கர்த்தருடைய தெய்வீக பாதுகாப்பு அனைத்து படைப்புகளின் மேலும் உள்ளது என்பதை மறுதலிப்பது இறையான்மைக்கு மீறிய செயல். இது பாவம்.

1.3 மத்தேயு 6:26-ன் படி, (ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள் ; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை ; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார் ) **கர்த்தர்** சிருஷ்டிகளை போஷிப்பது மட்டுமல்லாது இயற்க்கை வளங்களை படைப்புகளுடன் பகிர்வதன் மூலமாக தேவ

பாதுகாப்பில் பங்கெடுக்கிறோம் . வேதத்தில் கர்த்தர் நிலங்களை ஏழைகளோடும், அந்நியர்களோடும் மற்றும் காட்டு மிருகங்களோடும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதை குறித்து பல ஆனைகளை இஸ்ரவேலர்க்கு கொடுத்துள்ளத்தை காணலாம். எனவே வளங்களை பகிர்ந்து அளிக்காமல் சேர்த்து வைப்பதும், சுரன்டுவதும் கர்த்தருடைய ஆனையை மீறிய செயலாகும். ஆகவே இது பாவம்.

## 2. நாம் மனம் திருந்த வேண்டும்

2.1 நாற்பது நாள் தவகாலம் என்பது, பொதுவாக மோசே சீனாய் மலை மேல் கர்த்தரோடு இருந்ததற்கும் , நாற்பது வருடம் இஸ்ரவேலர் வனாந்திரத்தில் நடந்ததர்க்கும், இயேசு நாற்பது நாள் உபவாசத்தின் போது சோதிக்க பட்டத்திற்க்கும் தொடர்புடையது. தென் இந்திய திருச்சபையானது உலகளாவிய சபைகளுடன் இணைந்து நாம் மனம் திருந்தி ஆண்டவருடைய சித்தத்திற்க்கு நேராய் நமது வாழ்க்கை மாறவும், அவருடைய சித்தம் நமது வாழ்வில் வெளிப்படவும், மார்ச் 1 ம் தேதி முதல் ஏப்ரல் 15 ம் தேதி வரை லெந்து நாட்களை அனுசரிக்கிறது. நம்மை நாம் தற்பரிசோதனை செய்து, பாவங்களுக்கு வருந்தி தவறான பழக்கங்களை தவிர்த்து இயேசுவைப் போல் பாவத்தின் மீதும் மரணத்தின் மீதும் ஜெயமெடுக்க இந்த லெந்து நாட்களை பயன்படுத்தி கொள்கிறோம்.

2.2 ஆனபோதிலும், ஏசாயா 58 ஆம் அதிகாரம் 5 முதல் 7 வரை ஆகிய வசனங்களில் இருந்து கர்த்தர் “மனுஷன் தன் ஆத்துமாவை ஒடுக்குகிறதும் , தலைவணங்கி நாணலைப்போல் இரட்டிலும் சாம்பலிலும் படுத்துக்கொள்ளுகிறதும் , எனக்குப் பிரியமான உபவாச நாளாயிருக்குமோ இதையா உபவாசமென்றும் **கர்த்தருக்குப்** பிரியமான நாளென்றும் சொல்லுவாய்?அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும் , நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும் , சகல நுகத்தடிகளையும் உடைத்துப்போடுகிறதும் ,பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்துகொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக்கொள்ளுகிறதும் , வஸ்திரமில்லாதவனைக்கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும் , உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம் .” என்ற கேள்வியை எழுப்புகிறார். இதனால் , கர்த்தர் சுற்றுசூழல் நீதி உள்ளடங்கியுள்ள தேவ நீதியை நிலை நிறுத்த உபவாசம் இருக்க நம்மை அழைக்கிறார்.

2.3 சுற்று சூழல் நீதிக்கும் சமூக பொருளாதார நீதிக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இந்த உலகில் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க சுற்று சூழல் மற்றும் சமூக பொருளாதார பிரச்சனைகள் மீது செயல் படவேண்டும். சுற்று சூழல் நீதியை மீண்டும் நிலைநிறுத்துவது என்பது ஒரு ஆவிக்குரிய யுத்தம். அனைத்து உயிரினங்களுக்கும் மதிப்பு அளிப்பதும் , பண்பாக நடத்துவதும் தேவநீதிக்குட்பட்ட ஆவிக்குரிய காரியமாய் இருக்கிறது. மனிதனை மாத்திரமல்ல தேவனுடைய கிரியைகள் அனைத்திற்கும் முக்கியத்துவம் கொடுப்பது என்ற ஒரு ஆவிக்குரிய வளர்ச்சியை பெற அழைக்கப்பட்டிருக்கிறோம். அரசானது பட்ஜட்டில் இந்த காரியங்களுக்காக நிதி

ஒதுக்குவது மிகவும் முக்கியம். மத்திய அரசானது 2017 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் சுற்றுசூழல் அமைச்சரகத்திற்கு 19 சதவிகிதம் கூடுதல் நிதியை ஒதுக்கியுள்ளது பாராட்டத்தக்க விஷயமாகும். இந்தியா வனத்துறை மூலம் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் , ஆற்றல் திறன் மற்றும் கார்பன் சேகரிப்பு போன்றவற்றிற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய தவறியது தெரிய வருகிறது. மத்திய மற்றும் மாநில மாசு கட்டுப்பாட்டுவாரியங்கள் மறைமுக வரி சலுகைகள் கொடுப்பதன் மூலம் புதுப்பிக்க தக்க ஆற்றல் மூலம் அதிகமான மின் ஆக்கிகளை நிறுவ கவனம் செலுத்த படுகிறது. கார்பன் வெளியேற்றத்தை குறித்து கூட செய்திகள் குறிப்பிடபடவில்லை என்பது துரதிஷ்டம். ecology என்பதும் economics என்பதும் “OIKOS” என்ற ஒரே கிரேக்க வார்த்தையில் இருந்து வந்துள்ளது. சூழழியலை புறக்கணித்தல் அனைவருக்கும் ஆபத்தானது. இதில் இருந்து சூழலை புறந்தள்ளாத பொருளாதாரம் என்பது “இறை குடும்பம்” ‘Family of God’ என்று அறியப்படுகிறது.

## 3. “CARBON FAST”ஐ கடைபிடிக்க வேண்டும்

3.1 இந்தியாவின் கார்பன் அதிக அளவில் வெளியாவதன் மூலம் தட்பவெட்ப்பநிலை அதிகமாவதோடு,கடல் நீா் மட்டமும் உயா்கிறது. இதனால விவசாயம், மீன் பிடிதொழில, சமுதாய வளர்ச்சி, சூழ்நிலை மண்டலத்தில் உள்ள தாவரங்கள் மற்றும் விலங்குகள் நம் கடலோர பாதுகாப்பிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. 2070-ல் விஞ்ஞானிகளின் கணிப்பிற்கு ஏற்ப நாளொன்றுக்கு ஒரு மனிதன் குடிப்பதற்கு 2டம்ளா் தண்ணீா் மட்டுமே இருக்கும். 2035ல் வற்றாத ஜீவ நதிகள் என்றழைக்கப்படுகிற கங்கா, பிரம்புத்ரதிரா மற்றும் சிந்து நதிகள் காணாமல் போகும். 2016-ல் 330 மில்லியன் மக்கள் அதாவது இந்திய மக்கள் தொகையில் கால் பாதிக்கும் அதிகமான மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனா்.அனைத்து படைப்புகளும், தண்ணீா் இல்லாமல் பாலைவனமாகி தவிக்கும், இது நாம் திரும்ப சாி செய்ய முடியாத செயலாகும். நம்முடைய செயல்கள் காலநிலைக்கு அநீதி விளைவிப்பதாக இருப்பதால், ஏழைமக்கள் மற்றும் காட்டு விலங்குகள் இடம் பெயா்வதும், இதனால் அகதிகளின் எண்ணிக்கையும் அதிகாிக்கின்றது. நமது சுற்றுப்புற சூழலின் பாவங்களுக்காக வருந்தவும், நீதியை மீட்கவும், ‘Carbon fast’ மூலம் 40நாள் அனைவரும் ஒன்று சோ்ந்து உறுதிமொழி எடுப்போம்.

3.2 ‘Carbon fast’ நம் அன்றாட செயல்களுக்கு சவால் விடுவதாகவும், எவ்வாறு சுற்றுசூழலுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதையும் பிரதிபலிக்கிறது. இது சில சிறிய வழிமுறைகளை எடுக்க சாவல் விடுவதாகவும், இவற்றுள் சில வழிமுறைகள் கார்பன்-டை-ஆக்ஸைடு வெளியிடுவதை குறைக்கவும், சுற்றுசூழலுக்கு உதவியாக இருக்கின்றது. இந்த செயல்பாட்டின் மூலம் கடவுளோடும், அவரது படைப்புகளோடும் மற்றும் பிறரோடும் உள்ள ஐக்கியத்தை புதுப்பிக்கலாம். பெரும்பாலான சி.எஸ்.ஐ அங்கத்தினா்கள் பருவ நிலை மாற்றத்தின் பாதிப்பை ஏற்படுத்துகிற கூட்டத்தில் உள்ளோ். நாம் அனைத்து சபைகளிலும் காலநிலை நீதிக்காக விழிப்புணா்வு ஏற்படுத்தவேண்டும். மேலும் இந்த கண்ணோட்டத்தில் வேதாகமத்தை, படிக்கவும், நம்முடைய நம்பிக்கையை மீண்டும் உறுதிபடுத்திகொள்ளவும் வேண்டும். இன்று கால நீதிநிலைகளை கண்டுகொள்ள தேவாலயங்களில் ஒரு ஒருகிணைந்த காட்சி பகுதியாக சபைகளை ஊக்குவிக்க முடியும். சபைகள் விழிப்புணா்வு பெற்றுபாதிக்கப்பட்டஇயற்கையைபாதுகாக்கவும், மக்களைப்

பாதுகாக்கவும் அழைக்கப்படுகிறோம். ஆயுதமாகயிருந்து வாழ்கை மற்றும் வாழ்வாதாரத்தை சீர்படுத்தும் என்று நம்புகிறோம்.

3.3 இந்த "Carbon Fast" எண்ணற்ற வழிகளை சபைக்கு தந்து காலநிலை நீதியை அதிகரிக்க துணைபுரிகிறது. இதன்முலம் 40 நாட்களில் நீங்கள் உலகத்தை சிறிதளவு மாற்றுவதோடு முக்கியமாக நீங்கள் உங்களை மாற்றுவதற்கும் பெரிதும் உதவுகிறது. சில வருடங்களை திருப்பி பார்ப்போமானால், நாம் எவ்வளவு எரிவாயு பயன்படுத்தினோம்? நாம் அதற்கு எவ்வளவு செலவழித்தோம்? இதனுடைய பிரதிபலிப்பு நாம் சுற்றுசூழலை எவ்வாறு பயன்படுத்தினோம் என்பதிலிருந்து தெளிவாகும். இந்த தவ காலத்தில் நம்மை முழுமையாக அர்ப்பணித்து எளிமையாக வாழ்ந்து, எளிய உணவு, குறைந்த பயணம், மற்றும் தேவையானவர்களுக்கு நம்முடையதை பகிர்ந்து அளிப்போம்.

## 4. தீர்மானம்

மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திலுக்கிறார். நியாயம் செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேவேற என்னத்தை கர்த்தர் உண்ணிடத்தில் கேட்கிறார். (மீகா.6:8) வருங்கால சந்தியருக்கு குறைமதிப்பிற்கு உட்படுத்தாமல் உறுதுனையாக இருந்து நாம் பொருளாதாரத்தை மேம்படுத் வேண்டும். இது தொழிற்சங்கங்கள் மற்றும் மாநில அரசுகளின் பொறுப்புகள் மட்டுமல்ல ஒவ்வொரு குடிமகனுக்கும் பொறுப்பு உண்டு. காலநிலை நீதியை நிலைநிறுத்த அனைவரும் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் இன்னும் அதிக பொறுப்புடையவர்களாய் ஒன்றுகூடி ஒருமனதாய் ஜெபித்து, ஒற்றுமையாய் செயல்பட்டு உலகத்திற்காகவும் விஷேமாக நம் நாட்டிற்காகவும் செயல்பட்டு காலநிலை நெருக்கடியை சரிசெய்வோம், நாம் மற்ற படைப்புகளின் பாதுகாவலராய் நாம் நம்மை தேவபக்திக்கேற்ற ஒழுக்கத்தில் நம்மை ஈடுபடுத்திக் கொள்வோம் தேவனால் எல்லாம் கூடும்.

**ஊழியம் கொள்ளும்படி அல்ல, ஊழியம் செய்யும்படி அழைக்க பட்டோம்!**

**தாமஸ் K உம்மன்**

(Given in Chennai, India at the Church of South India Synod Secretariat, on February 8, 2017, in the first year of my ministry as moderator.)